ATR
39
உ.296

உ
ஐயப்பசுவாமி துணை



# ஸ்ரீ ஐயப்பசுவாமி திருப்பாடல்களும் கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களும்

தொகுப்பு ;
'கிரியா வித்தகர்', 'குருமணி', 'விநாயக பூஜா துரந்தரர்'
சிவஸ்ரீ கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்கள்

வெளியீடு :
அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

1986.06.07

உ
கணபதி துணை



# ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருப்பாடல்களும்

**விநாயகர் சிவன், சுப்பிரமணியர்,, முத்துமாரி அம்பாள்**

## கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களும்

தொகுத்தவர் :
'கிரியா வித்தகர்' - 'குருமணி' - 'விநாயகபூஜா துரந்தரர்'
**சிவஸ்ரீ கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்கள்**

வெளியீடு :
**அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர்சபை,**
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

வெளியீடு!
அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை
9 - ஆவது வெளியீடு

தொகுத்தவர்;-
கிரியா வித்தகர், குருமணி, விநாயகபூஜா துரந்தரர்:
சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள்
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

அச்சுப்பதிப்பு:-
சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.

உ

குருபாதம்

**நல்லை ஆதீனம் - இரண்டாவது குருமஹாசன்னிதானம்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**

**பரமாசார்ய சுவாமிகள்**

வழங்கிய

# அருளாசி உரை

ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருப்பாடல்களும் — கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்களும் என்னும் நூலினை மயிலிட்டியைச் சார்ந்த சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்கள் தொகுத்து வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது. அவர்கள் சிவாச்சாரியருக்குரித்தாய நிறைவான சைவ சமய நெறி நின்று வழுவா தொழுகுபவர்கள். அன்பர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டி நாம் எண்ணியதையெல்லாம் அவர்கள் தம் முன்னுரையிலே தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமியின்பால் தாம் கொண்டுள்ள முறுகிய பக்தியின் பிரதிபலிப்பே இச் சிறிய நூலாகும். 'சாமியே சரணம் ஐயப்பா' என்று அப் பெருமானைப் போற்றி வழங்கும் பேரொலி இந் நாட்டிலும் — தமிழகத்திலும் அன்பர்கள் வாய் வழி முழங்குவதை நாம் அறிவோம். அத்தோடு ஆசிரியர் கூட்டுப் பிரார்த்தனைக்குப் பயன்படும் திருமுறைப் பாக்களையும் இந் நூலிற் சேர்த்துள்ளார்கள்.

சைவ அன்பர்கள் இந் நூலுக்கு நன் மதிப்பளித்து, பாராயணம் செய்து ஸ்ரீ ஐயப்ப சுவாமிகளின் கிருபாகடாக்ஷம் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

# பதிப்புரை

சபரி மலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஐயப்ப சுவாமி அடியேனையும் தமது திருப்பதிக்கு வரும்படி அருள்பாலித்தார், ஐயனின் திருவுள்ளப்படி கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ முத்து மாரி அம்பாள் திருமுன்னிலையில் அடியேனும் ஸ்ரீ அருணாசலக்குருக்களும் ஐயப்பமாலையை குருவின் கையால் சூடிக்கொண்டு விரதத்தை ஆரம்பித்தோம், குறிப்பிட்ட நாளில் தாய்நாடு சென்றோம், அங்கு தங்கியிருந்த காலத்தில் இல்லங்கள்தோறும் சென்று ஐயப்ப பஜனையில் கலந்துகொண்டோம். ஐயனது பஜனைப் பாடல்கள் மனத்திற்குச் சாந்தியைக் கொடுத்தன. யான் அடைந்த இன்பம் எமது மக்களும் அடையவேண்டும்; மனச்சாந்தி அடையவேண்டும் என்ற ஆவலினால் இந்தப் பஜனைத் தொகுப்பை எழுதியுள்ளேன், பெருமக்களே! இரண்டுவருடம் சபரிமலை யாத்திரை மேற்கொண்ட நாம் இவ்வருடம் அதைத் தொடர முடியாது போய்விட்டது. இதுவும் ஐயனின் திருவருள் போலும்! சிவபெருமானின் திருக் கலியாணம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு காரண நிமித்தமாக இறைவன் நாரத முனிவனை அழைத்து ''நீ பொதிகை மலைக்குப் போ'', எனக் கட்டளை இட்டார். நாரதமுனிவர் சுவாமி! தங்களது திருமணக் கோலத்தைக் காணாது போகப்போகிறோமே என வருந்துகின்றேன் என்றார். நாரதா! நீ பொதிகை மலையில் இருந்து இந்தத் திருக்கோலத்தைக் காண்பாய் எனக் கட்டளையிட்டார். அதுபோன்று கட்டுவன் பதியிலே ஐயன் அடியேனுக்கு சபரி மாமலை மகரஜோதிக் காட்சியைக் காட்டினான். எமக்கு மட்டுமல்ல கட்டுவன் பதிவாழ் பெருமக்கள் எல்லோருக்கும் அந்தக் காட்சியைக் காட்டியருளினார். அடியார்கள் எல்லோரும் கண்டு ஆனந்தித்தார்கள்.

பெருமக்களே! ஐயப்ப விரத காலங்களில் பாடிப் பரவசப்பட இது உதவும். மேலும் இத்தொகுப்பிலே பன்னிரு திருமுறைகளில் இருந்து ஒவ்வொரு தேவாரங்களையும், பஞ்சபுராணங்களையும், பஜனைப் பாடல்களையும் சேர்த்துள்ளோம்,

துன்பங்கள் துயரங்கள் நீங்கி எப்பொழுதும் இன்பத்தைப் பெறுவதற்கு ஒரே ஒரு மார்க்கம் - வழி, இடைவிடாது இறைவனை வணங்குவது. இறைவனை உள்ளத்திலே இருத்தி மனம்உருகி வணங்குவதற்கு மிகச் சுலபமானவழி அருளாளர்களின் திருப்பாடல்களை, திருமுறைகளைப் பொருள் உணர்ந்து பாடுவதாகும். கூட்டுவழிபாடு தான் மக்களின் மனத்திற்கு என்றும் சாந்தியைக் கொடுக்கும்.

இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

க. சிவபாதசுந்தரக்குருக்கள்,

மயிலிட்டி, தெல்லிப்பளை,
1-4-1985.

# ஐயப்ப சுவாமியின்
## சரித்திரச் சுருக்கம்

மகிஷி தனது தமையனுன மகிடாசுரனைத் துர்க்கா தேவி சங்கரித்ததைக் கேள்விப்பட்டாள். தானும் துர்க்கா தேவியைப் போல் ஒரு வீராங்கனையாக வந்து தேவர்களைப் பழி வாங்க வேண்டு மென்று சிந்தித்தாள். அதற்காகப் பிரமதேவனை நோக்கித் தவம் செய்தாள். பிரமதேவன் தோன்றினுன். நான் இறக்காமல் இருக்க வேண்டும். தேவர்களை வெல்லக் கூடிய ஆற்றல் வேண்டும். ஒரு சமயம் இறக்க நேரிட்டால் இரண்டு ஆண்களுக்கு ஒரு பிள்ளை தோன்றி அதுவும் பன்னிரண்டு வருடம் வரை பிரமச்சாரிய விரதம் இருந்த ஒரு சிறுவனுல் தான் இறப்பு நேரிட வேண்டும் சுவாமி! இவற்றை எனக்கு வரமாகத் தரல் வேண்டும் என்று கேட்டாள். அப்படியே பிரமதேவன் வரம் கொடுத்து விட்டார். தனது ஆண்மையினுலே தேவர்களைத் துன்புறுத்தினுள். தேவர்கள் பரமசிவனிடம் சென்று தங்களது கஷ்டங்களைக் கூறி வேண்டுதல் செய்தார்கள். இறைவன் தேவர்களே! சமயம் வரும்போது உங்களது துன்பத்தை நீக்கி வைப்பேன்! போங்கள்! என விடை கொடுத்தான். பந்தள தேசத்து அரசன் தனது சந்ததி தழைக்க ஒரு புத்திரன் வேண்டும் என்று பரமசிவனை வணங்கி வேண்டுதல் செய்து வந்தான். இறைவன் இருவருடைய குறைகளையும் தீர்த்து வைக்கும்படி தமது திருவுள்ளத்தில் நினைந்தார்

மகாவிஷ்ணுவை மோகினி வடிவாக வரும்படி அழைத்தார். அரியும் அரனும் கூட திருவருளால் ஒரு. புத்திரன் தோன்றினுன். அப்புத்திரனுக்கு அரிஹர புத்திரன் என்று நாமம் சூட்டினுர்கள். அரிஹர புத்திரரைப் பார்த்து நீ பூவுலகம் சென்று பந்தள தேச மன்னனிடம் குமாரனுகப் பன்னிரண்டு வருடம் வாழ்ந்து மகிஷியைச் சங்கரித்துத் தேவர் குறையை நீக்குவாயாக என்று கட்டளையிட்டார். இறைவனது ஆணைப்படி அரிஹர புத்திரர் பம்பை ஆற்றங்கரையிலே மானிடக் குழந்தை

வடிவமாகக் கிடந்தார். வேட்டைக்கு வந்த பந்தள மன்னன் குழந்தையின் குரல் கேட்டு குழந்தையை எடுத்துக் கொண்டு அரண்மனை சென்ருன்.

குழந்தையின் கழுத்திலே மணிமாலை இருந்த காரணத்திஞலே அந்தக் குழந்தைக்கு "மணி கண்டன்" என நாமம் சூட்டி வளர்த்து வருகின்ருன்.

தகுந்த பருவத்திலே மணிகண்டனைக் குருகுலத்துக்கு அனுப்பி வைத்தான். அதன் பின்பு அரசனுக்கும் அரசிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதனையும் அன்போடு சீராட்டிப் பாராட்டி வளர்த்து வருகிருர்கள். குருகுல வாசம் முடித்துக் கொண்டு மணிகண்டன் புறப்படும் பொழுது குருவானவர் தனக்கு குருதெட்சணை தருமாறு கேட்டார். அதற்கு மணிகண்டன் குருவே! பிதாவிடம் சொல்லி நாடும் திரவியங்களும் வாங்கித் தருகின்றேன் என்று கூறிஞர். அதற்குக் குருவானவர் மணிகண்டா! எனக்குப் பொன்னும் பொருளும் வேண்டாம். எனது மகனுக்கு கண்பார்வையைக் கொடு! எனக்கு உன் திருவடி சேருகின்ற பேற்றைக் கொடு! என்று கேட்டார். மணிகண்டன் குருவே! அது எப்படி! என்ஞல் முடியும் என்ருன். மணிகண்டா! உனக்குப் பாடம் சொல்லித் தரும் பொழுதே உனது உண்மைச் சொரூபத்தைக் கண்டு கொண்டேன். நீங்கள் ஹரிஹர புத்திரர்! சுவாமி! அடியேனது வேண்டுதலை ஏற்று அருள் செய்ய வேண்டும் என்று திருவடியிலே வீழ்ந்து வணங்கிஞர். உடனே மணிகண்டன் குருவே! உமது எண்ணம் போல் வரம் தந்தோம்! என்று கூறி இந்த உண்மையை உலகத்தவர்களுக்குச் சொல்லக் கூடாது என்று கூறிஞர்.

குருகுலவாசத்தை முடித்துக் கொண்டு வந்த மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டுமென்று அரசன் எண்ணிஞன். இதை அரசி அறிந்தாள். தனது பிள்ளைக்குத் தான் பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமென்ருள். குடும்பத்திலே சச்சரவு மூண்டது. மணிகண்டனது பட்டாபிஷேகத்தை நிறுத்துவதற்கு அரசி ஒரு சூட்சி செய்தாள். தனக்குத் தீராத தலைவலி என்றும்

அதற்குப் புலிப்பாலில் மருந்து கொடுத்தால் தான் தீரும் என்றும், இதை அரண்மனை வைத்தியர்கள் கூறினர்கள் என்றும் ஒரு கட்டுக் கதையை அரசனுக்குக் கூறினள். புலிப்பால் கொண்டுவர யாரால் முடியும் என்று அரசன் யோசித்தான். மணிகண்டன் தான் போய் புலிப்பால் கொண்டு வருகிறேன் எனக் கூறிப் புறப்பட்டான். கானகத்திற்குச் செல்லும் மணிகண்டனுக்கு அரசன் பாதுகாப்பாக மூன்று கண்களையுடைய ஒரு தேங்காயை எடுத்து ஒரு முடியாகவும், சாப்பாட்டுப் பொருட்களை ஒரு முடியாகவும் கட்டி மகனது தலையில் வைத்து, வில்லும், அம்பும் கரத்திலே கொடுத்து சிவபெருமானை மறவாத சிந்தையனுகச் சென்று வா என்று அனுப்பி வைத்தான்.

கானகம் சென்ற மணிகண்டப் பெருமானை வணங்கி முனிவர்களும் தேவர்களும் அழைத்துச் சென்று பொன்னம்பல மேட்டிலே எழுந்தருளச் செய்து பூசித்துத் தங்களது குறைகளைக் கூறினர்கள். மணிகண்டப் பெருமான் அவர்களுக்குத் திருவுள் செய்து கானகம் செல்ல அங்கே வந்து எதிர்த்த மகிஷியைக் கொன்று அவளது சாபத்தை நீக்கி மஞ்சமாதா என்னும் நாமத்துடன் தனது சகோதரியாக்கி தன் பக்கத்திலே இருத்திக் கொண்டார். பின்பு தெய்வேந்திரனை வேங்கைப் புலியாக்கி மற்றைய தேவர்களைப் புலிகளாக்கிக் கொண்டு நாட்டுக்குள் வந்தார் மணிகண்டர். இதனைக் கேள்வியுற்ற மன்னனும் மக்களும் சென்று பார்த்தார்கள். உடனே அரசனுக்கு உண்மை விளங்கிவிட்டது. அவர் பாதத்திலே வீழ்ந்து வணங்கினன். உடனே மணிகண்டப் பெருமான் அவரை எடுத்து தந்தையே! நான் ஒரு காரணமாக உங்களிடம் பன்னிரண்டு வருடம் வாழ்ந்து வந்தேன். நான் வந்த வேலை முடிந்து விட்டது. நான் சபரிமலை செல்லப் போகின்றேன். அங்கே எனக்குப் பதினெட்டுப் படிகள் அமைத்து அதன் மேல் நான் இருப்பதற்கு ஒரு கோயில் அமைத்துத் தாருங்கள். நான் அங்கே தான் இருப்பேன். என்னைப் பார்ப்பவர்கள் ஒரு மண்டலம் பிரமச்சாரிய விரதம் இருந்து இரு முடி கட்டிக் கொண்டு வந்து என்னைத் தரிசித்தல் வேண்டும் என்ருர். மணிகண்டப்

பிரபுவே! நான் ஆசையோடு உனக்கு அணிவதற்கு நகைகள் ஆபரணங்கள் எல்லாம் செய்து வைத்திருக்கின்றேனே! அதை என்ன செய்வது? என்று மனவேதனையுடன் கேட்டார். தந்தையே! தைமாதப் பிறப்பன்று அந்த நகைகளையெல்லாம் கொண்டு வந்து எனக்கு அலங்காரம் செய்யுங்கள். நான் மாலை ஆறு மணிக்கு ஆகாயத்திலே ஜோதியாகக் காட்சி தருவேன். நான் ஏற்றுக் கொண்டதற்கு இதுவே அறிகுறியாகும்; மக்கள் வெள்ளத்தோடு நீங்களும் இந்தக் காட்சியைக் காணலாம்! என்று கூறி மறைந்து விட்டார். மணிகண்டர் பெருமானது கட்டளைப்படி அவரால் குறிப்பிட்ட இடத்திலே கோயில் கட்டப்பட்டது. இன்றும் திரு ஆபரணங்கள் அணிவித்து மகரஜோதி விழா நடைபெற்று வருகின்றது. கோடிக்கணக்கான மக்கள் விழாவில் கலந்து கொண்டு திருவருட் பேறு அடைகின்றார்கள். இந்த வழிபாட்டின் தத்துவம் :- மனிதன் ஒரு மண்டலம் ஜீவயாத்திரைக்காக தன்னைத் தயார் படுத்திக் கொள்ளுகின்றான். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மா ஆணவத்தையும் கர்மத்தையும் படிப்படியாக நீக்கி இறைவனது முன்னிலையை அடைகிறது. இது வரையிலும் மாயையின் முனைப்பினோடு இருந்த ஆன்மா திருவருள் சத்தியாகிய கட்கத்தினால் மாயையின் முனைப்பை நீக்க தூய்மையாகிய ஆன்மா இறைவனது திருவடியை அடைகின்றது என்பதாகும். இங்கே ஆணவம் என்பது தேங்காயின் மட்டை, கர்மம் என்பது தும்பு, மாயை என்பது கருநிறம் பொருந்திய கடினமான சிரட்டை. அது திருவருட் சத்தியாகிய ஞானகட்கத்தினால் உடைக்கப்படுகின்றது. உள்ளே இருக்கும் தூய பருப்பு (நெய்) தான் ஆன்மா அது இறைவனது பாதத்தை அடைகின்றது. (கட்கம் - கத்தி)

ஐயப்ப சுவாமியின் சரிதையைச் சுருக்கித் தத்துவத்துடன் எழுதியுள்ளேன். இது ஐயப்ப பக்தர்களுக்கு மிகவும் பிரயோசனப்படும் என்று எண்ணுகின்றேன்.

சிவபாதசுந்தரக் குருக்கள்

உ

# பன்னிரு திருமுறை

## தேவாரம்

திருஞானசம்பந்த சுவாமிகள் முதலாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

இரண்டாந் திருமுறை

நீநாளும் நன்னெஞ்சே நினை கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட் டெம்பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்ப புகழ்நாமஞ் செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

மூன்றாந் திருமுறை

சொல்வாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனு மியம்பு வராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே.

சலம்பூ வொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந் தறியேன்
நலந் தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள் உறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.

ஐந்தாந்திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிற வியே.

ஆறாந் திருமுறை

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் ஏழாந்திருமுறை

பித்தாப்பிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
[ அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே.

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் எட்டாந்திருமுறை

அன்றே என்றன் ஆவியும்
 உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் எனையாட்
 கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
 எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
 நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

திருமாளிகைத்தேவர் ஒன்பதாந திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
 உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
 சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
 அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சேந்தனார் ஒன்பதாம் திருமுறை

சீருந் திருவும் பொலியச்
 சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
 பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
 உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்பரிசுநாம்
 பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

திருமூலநாயனார் பத்தாந் திருமுறை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே.

## திருவந்தாதி

காரைக்காலம்மையார் பதினொராந் திருமுறை

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே -- அறிகின்ற
மெய்ப் பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

## திருப்புராணம்

சேக்கிழார் பெருமான் பன்னிரண்டாந் திருமுறை

ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடு மானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

உ

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

## திருவாசகம்

இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்
பத்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுமே.

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்
கொழுந்தைத்
தேனக்கமலர்க்கொன்றைச் சென்சடையார்சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமாதான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

௪

# பிள்ளையார் வழிபாடு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மை
கண்ணிற் பணிமின் கனிந்து. (யினுஸ்

ஜய கணேச ஜய கணேச ஜய கணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம் (ஜய கணேச)

கண நாதம் கண நாதம், ஈஸ்வர புத்திரம் கண நாதம்
விக்ந விநாயக கண நாதம், சித்தி விநாயக கண நாதம்
பார்வதி புத்திரம் கண நாதம், முத்தி பிரதாயக கண
நாதம்
மூஷிக வாகன கண நாதம் மோதக ஹஸ்தா கண நாதம்
(கண நாதம்)

சிவ சிவ கெஜமுக கணநாதா, சிவகண வந்தித குணநீதா
வா வா வா வா அங்குச பாசா, வந்தருளின்பந் தந்திடு நேசா
உமைதரு பாலா குருமணியே, உந்தனடைக்கலம் அடியோமே
மகா கணபதே குருசரணம், மனம் மகிழ்ந்து வந்தருள் சரணம்
சரணம் சரணம் தந்திமுகா, சரவணபவனுக்குயர் துணைவா
(சிவ - சிவ)

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீங்கச் செய்யும் பிள்ளையார்
(பிள்ளையார்)

மஞ்சலிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சிற் காட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

கலியுகத்ததின் விந்தைகளைக் காணவே அனுதினமும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போலே சுற்றுவார்
(பிள்ளையார்)

ஸ்ரீ சித்தி விநாயக சுவாமிக்கு ஜே

## திருவிளக்கு வழிபாடு

ஊன் ஆனாய் உயிர் ஆனாய்
உயிரில் ஊறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம்பூத
வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க் கொன்றைச்
சிவம் என்னும் பொருள் ஆனாய்
நான் ஆனாய் உயிர்க்கு உயிரே
ஞானப் பேரொளி யுமையே.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

அகவல்

விளக்கே திருவிளக்கே
வேந்தனுட நற்பிறப்பே
ஜோதி விளக்கே
ஸ்ரீ தேவி பெண்மணியே

அந்தி விளக்கே
அலங்காரப் பெண்மணியே
காந்தி விளக்கே
காமாட்சி தேவியரே

பசும் பொன் விளக்கு வைத்து
பஞ்சுத் திரி போட்டு
குளம் போல நெய்விட்டு
கோலமுடன் ஏற்றிவிட்டேன்

பொட்டு மிட்டேன் குங்குமத்தால்
பூ மாலை சூட்டி விட்டேன்
ஏற்றினேன் நெய்விளக்கு
எந்தன் குடிவிளங்க

வைத்தேன் திருவிளக்கு
மாளிகையுந் தான் விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள
மாதாவைக் கண்டுகந்தேன்

மாங்கல்யப் பிச்சை
மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சை யுடன்
தனங்களையும் தாரும்மம்மா

பெட்டி நிறையப்
பூஷணங்கள் தாருமம்மா
கொட்டில் நிறையப்
பசுமாடு தாரும்மம்மா

புகழுடம்பைத் தந்தெந்தன்
பக்கத்தே நில்லு மம்மா
அகத் தெழிவைத் தந்தெனது
அகத்தினிலே வாழுமம்மா

சேவித்து எழுந்து நின்றேன்
தேவி வடிவு கண்டேன்
வஜ்சிர கிரீடம் கண்டேன்
வைடூரிய மேனிகண்டேன்

முத்துக் கொண்டை கண்டேன்
முழுப்பச்சை மாலேகண்டேன்
சவரி முடி கண்டேன்
தாழை மடல் சூடக்கண்டேன்

பின்னலழகு கண்டேன்
பிறைபோல நெற்றிகண்டேன்
சாந்திடும் நெற்றி கண்டேன்
தாயார் வடிவுகண்டேன்

குறுக்கிடும் நெற்றி கண்டேன்
கோவைக்கனி வாயுங் கன்டேன்
செந்தாழைப் பூமடல் போல்
செவியிரண்டுங் கண்டுகொண்டேன்

செண்பகப் பூப்போல
திருமூக்கும் கண்டுகந்தேன்
மார்பில் பதக்கம் மின்ன
மாலே அசையக் கண்டேன்

காலில் சிலம்பு கண்டேன்
ாலாழிப் பீலிகண்டேன்
பட்டாடை தானுடுத்த
பிடியிடையைக் கண்டுகந்தேன்

மங்கள நாயகியே உன்னை
மனங்குளிரக் கண்டுகொண்டேன்
அன்பே! அருந்துணையே
உனையடைந்த எந்தனுக்கு

வந்த வினையகற்றி
மகா பாக்கியம் தந்தருள்வாய்
தந்தையும் தாயும் நீயே
தற்காக்கும் ரக்ஷி நீ

அந்தரத்திற்குதவி நீயே
ஆதாரமும் நீயே தான்
உன்னை உறவாக நம்பி
உற்றுரைக் கைவிட்டேன் தாயே

சந்தானம் சௌபாக்கியம் அளித்து
சாதுக்கள் சேவை எனக்களிப்பாய்
பக்தியுள்ள மனதெனக்குத் தந்து
பரதேவி கிருபையுடனே அருள்வாய்

## திருவிளக்கு அர்ச்சனை

| | |
|---|---|
| பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் | போற்றி |
| போகமும் திருவும் புணர்ப்பாய் | போற்றி |
| முற்றறி வொளியாய் மிளிர்ந்தாய் | போற்றி |
| மூவுலகும் நிறைந்தி ருந்தாய் | போற்றி |
| வரம்பில் இன்பமாய் வளர்ந்தாய் | போற்றி |
| வானமாய் அருள்மழை பொழிந்தாய் | போற்றி |
| இயற்கை அறிவொளி யானாய் | போற்றி |
| ஈரே ழுலகம் ஈன்றாய் | போற்றி |
| பிறர் வயமாகாப் பெரியோய் | போற்றி |
| பேரின்பப் பெருக்காய் பொலிந்தோய் | போற்றி |
| பேரருட் கடலாம் பொருளே | போற்றி |
| பெரியோர்க் கெல்லாம் பெரியோய் | போற்றி |

முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
மூவுலகும் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி

ஓம்என்னும் சிற்பரத் தாளே
அபாயம் அறுக்கும் அறுகோணத்தி
சொற் பவத்தி சூக்ஷ்ம ரூபி
சரணம் சரணம் தாள்பணிந்தேன் உன்னை

பாவம் பொறுத்து பலபவுசும்தான் கொடுத்து
விக்கினங்கள் வராமல் வேலிபோல் காத்து
ஆதரித்து எனக்கு அருள்புரி வாயே
புவனசுந்தரி போற்றி போற்றி

குருவடிவாய் வந்து உபதேசங்கள் கொடுத்து
உன் திருவடி தந்து அருள்வாயே
ஸரணுகத தீனர்த்த பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரே தேவி
நாராயணி நமோஸ்துதே!

ஜெயநாராயணி நமோஸ்துதே!
ஜெயநாராயணி நமோஸ்துதே!!
ஜெயநாராயணி நமோஸ்துதே!!!
ஸ்ரீ தீபலக்ஷ்மி தேவிக்கு ஜே!

## குரு வழிபாடு

குருப் ப்ரஹ்மா குருர் விண்ணு: குரூர்தேவோ மஹேச்வர:
குரு: சாக்ஷாத் பரப் ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:

அழுந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஆடி ஓடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந் தொறும் காக்குந் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை யிப்படி உலாவுமென்
குருநாதன் 'வாழி வாழி.

காயனை அகாயனுக்கிக்
கண்டனை அகண்ட னுக்கிப்
பேயனைப் பிரம்ம மாக்கிப்
பிறப் பிறப் பில்லாமை யாக்கி
தாயினும் இனிய னுகி
தகைந் தெனை யணைத்து ஆண்ட
தூய சற்குருவே உன்னைத்
தொழுந் தொறும் களி துலங்குமே

என்னை யெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி யென்தலை வைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானுன் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறிய வொண்ணுன் எங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானுய் விளங்குகின்றுன் எங்கள் குருநாதன்

ஆதியந்த மில்லை யென்றுன் எங்கள் குருநாதன்
அதுவே நீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
சோதி மயமென்று சொன்னுன் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றுன் எங்கள் குருநாதன்
சாதி சமய மில்லாதான் எங்கள் குருநாதன்
தான் தானுய் விளங்குகின்றுன் எங்கள் குருநாதன்
வாதியரும் காண வொண்ணுன் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பம் தந்தான் எங்கள் குருநாதன்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

# சிவ வழிபாடு

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதிதானே.

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் நமசிவாய

சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
அர ஹர ஹர ஹர நமசிவாய

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமிப்பிரிய நடராஜா
நடராஜா நடராஜா ஆனந்தத் தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா ஊர்த்துவ தண்டவ நடராஜா

நடராஜா நடராஜா சிதம்பரேசா நடராஜா
நடராஜா நடராஜா சிற்சபேசா நடராஜா
நடராஜா நடராஜா பன்னக பூஷண நடராஜா
நடராஜா நடராஜா சச்சிதானந்த நடராஜா
நடராஜா நடராஜா கனகசபேசா நடராஜா
நடரர்ஜா நடராஜா தில்லைத் தாண்டவா நடராஜா

ஸ்ரீ சிவகாம சுந்தரி நடராஜப் பெருமானுக்கு ஜே!

# சக்தி வழிபாடு

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி திரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனதீத நாயகி குணதீத
நாதாந்த சக்தி யென்றுன்
நாமமே யுச்சரித்திடு மடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ்
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியும் இருகொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராசனுக் கிருகண் மணியா யுதித்தமலை
வளர் காதலிப் பெண்ணுமையே.

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சத்திய ஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம் சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம் சிவம்
வேத சாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம் சிவம்
வீர தீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம்
நாத கீத கானகலா நடனசக்தி ஓம் சிவம்
மஹாமந்ர யந்திர தந்திர வைஸ்ய சக்தி ஓம் சிவம்
யோக போக த்யாக சக்தி லோகசக்தி ஓம் சிவம்
தாக மோக சோக ரஹித தபோ சக்தி ஓம் சிவம்
துஷ்ட சத்ரு நாக சக்தி துர்க்காசக்தி ஓம் சிவம்
அஷ்ட லக்ஷ்மி ஞானவாணி அமர சக்தி ஓம் சிவம்
குஞ்சித பத அபயஹஸ்த வாஞ்சித பல தாயகம்
குருபர சிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்

ஸ்ரீ பராசக்திக்கு ஜே!

# முருக வழிபாடு

அருவமு முருவுமாகி யனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய

வேல்முருகா மால்மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா ஷண்முகா
நால் வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்லமாச்சிலை யணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர் வேல் தாங்கியஎன் தேவா ஷண்முகா
ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆநந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலைத் தருபவனே தேவே ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா
நாறு மாலை அணிமார்பா நாயகா ஷண்முகா
நாத விந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே ஷண்முகா
வீடும் நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா
எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா ஷண்முகா
தொல்லை யெல்லாம் கடந்த பாதம் தந்திடாய் ஷண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் ஷண்முகா
கல்லை யொத்த மனமுருகக் கருணைசெய் ஷண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா ஷண்முகா
(வேல் முருகா

ஸ்ரீ முருகப் பெருமானுக்கு ஜே.

# முத்துமாரி அம்பாள் வழிபாடு

நெஞ்சமதில் குடிபுகுந்தாய் எங்கள் முத்துமாரி அம்மா
எங்கள் முத்துமாரி
நின் பாதம் சரணடைந்தோம் எங்கள் முத்துமாரி ,,
தஞ்சமென்று வந்துவிட்டோம் எங்கள் முத்துமாரி ,,
தயவுடனே காத்திடுவாய் எங்கள் முத்துமாரி ,,
வஞ்சகரை மாய்த்திடுவாள் எங்கள் முத்துமாரி ,,
வந்தவினை தீர்த்திடுவாய் எங்கள் முத்துமாரி ,,
மஞ்சள்பூசி மகிழ்ந்திருப்பாள் எங்கள் முத்துமாரி ,,
மங்களமாய் வாழ்ந்திருப்பாள் எங்கள் முத்துமாரி ,,
துணையிருந்து காத்திடுவாள் எங்கள் முத்துமாரி ,,
துன்பமெலாம் போக்கிடுவாள் எங்கள் முத்துமாரி ,,
பிணியகற்றும் தெய்வங்கள் எங்கள் முத்துமாரி ,,
பெயர் விளங்கச் செய்திடுவாள் எஙகள் முத்துமாரி ,,
அணையாத ஜோதி அவள் எஙகள் முத்து மாரி ,,
ஆதிபராசக்தி அவள் எஙகள்முத்துமாரி ,,
இணையில்லாத் தெய்வமவள் எஙகள் முத்துமாரி ,,
எங்கள்குறை தீர்த்திடுவாள் எங்கள் முத்துமாரி ,,
வேர்க்காட்டில் வாழ்ந்திருப்பாள் எங்கள் முத்துமாரி ,,
வேலனுக்கு அன்னையவள் எங்கள் முத்துமாரி ,,
பொற்பாதம் பணிய வந்தோம் எங்கள் முத்துமாரி ,,
பொங்குபுகழ் கொண்டவளாம் எங்கள் முத்துமாரி ,,
நாற்கவியும் பொழிந்துன்னை எங்கள் முத்துமாரி ,,
நாவார வாழ்த்திடுவோம் எங்கள் முத்துமாரி ,,
பாற்கடலாய் நின்கருணை எங்கள் முத்துமாரி ,,
பரவுதம்மா நின்பெருமை எங்கள் முத்துமாரி ,,
நிலம்வாழ வந்தவளாம் எங்கள் முத்துமாரி ,,
நீதிவடி வானவளாம் எங்கள் முத்துமாரி ,,
குலம்தழைக்கச் செய்திடுவாள் எங்கள் முத்துமாரி ,,
கூறும்வினை தீர்ப்பவளாம் எங்கள் முத்துமாரி ,,
நலம் கொடுக்கும் நாயகியாம் எங்கள் முத்துமாரி ,,
நல்வழி சேர்ப்பவளாம் எங்கள் முத்துமாரி ,,
சலாகை யொலி கேட்டிடவே எங்கள் முத்துமாரி ,,
தயவுடனே வந்திடுவாய் எங்கள் முத்துமாரி ,,
அம்மா எங்கள் முத்து மாரி ,,
கற்பூர ஜோதியிலே காட்சி தரும் மாரி ,,
அற்புதமாய் உலகினிலே ஆட்சி செய்யும் மாரி ,,
கருணை உள்ளம் கொண்டவளே கண்ணான மாரி ,,
பொற்காலம் வழங்கிடுவாய் பொன்னான மாரித்தாயே! ,,

உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்து

உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா ,,
கலகத் தரக்கர் பலர் எங்கள் முத்து மாரியம்மா ,,
கருத்தினுள்ளே புகுந்து விட்டார் எங்கள் முத்துமாரியம்மா ,,
பல கற்றும் பல கேட்டும் எங்கள் முத்து மாரியம்மா ,,
பயனென்றும் இல்லையடி எங்கள் முத்துமாரியம்மா ,,
நிலை எங்கும் காணவில்லை எங்கள் முத்துமாரியம்மா ,,
நின் பாதம் சரண் புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா ,,
துணி வெளுக்க மண் உண்டு எங்கள் முத்துமாரியம்மா ,,
தோல் வெளுக்க சாம்பருண்டு எங்கள் முத்துமாரியம்மா ,,
மணி வெளுக்க சாம்பருண்டு எங்கள் முத்துமாரியம்மா ,,
மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்துமாரியம்மா ,,
பிணிகளுக்கு மாற்றுண்டு எங்கள் முத்துமரியம்மா ,,
பேதமைக்கு மாற்றமில்லை எங்கள் முத்துமாரியம்மா ,,
அணிகளுக் கோரெல்லை யில்லை எங்கள் முத்துமாரியம்மா ,,
அடைக்கலம் இங்குனைப் புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா ,,

அருள் நாடி வருவோர்க்கு அருளினை வழங்குவாய்
பொருள் தேடிவருவோர்க்குப் பொருளினை வாரிக் கொடுப்பாய்
இருள் நீக்க வேண்டு வோர்க்குப் பேரொளி காட்டிடுவாய்
ஏதும் கேளா எனக்கு எல்லாம் நீ தருவாய்.
ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு ஜே

# ஐயப்ப வழிபாடு



## சரணம் பொன் ஐயப்பா

| | |
|---|---|
| அரிகர சுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| ஆனந்த சோதியே | ,, ,, ,, |
| இன்பப் பொருளே | ,, ,, ,, |
| ஈசனும் நீயே | ,, ,, ,, |
| உம்பர் தருவே | ,, ,, ,, |
| ஊமைக்கருள் செய்தவா | ,, ,, ,, |
| எங்கள் குல தெய்வமே | ,, ,, ,, |
| ஏழைக்கு எளியாய் | ,, ,, ,, |
| ஐயம் தீர்ப்பாய் | ,, ,, ,, |
| ஒப்பிலா மணியே | ,, ,, ,, |
| ஓங்காரத் தத்துவமே | ,, ,, ,, |
| ஔஷதம் நீயே | ,, ,, ,, |
| கலிகால மூர்த்தியே | ,, ,, ,, |
| காந்தமலை ஜோதியே | ,, ,, ,, |
| கிருபை புரிபவனே | ,, ,, ,, |
| கீர்த்தி அளிப்பவனே | ,, ,, ,, |
| குருவின் குறை தீர்த்தவனே | சரணம் பொன் ஐயப்பா |

| | | | |
|---|---|---|---|
| கூலி கொடுப்பவனே | சரணம் | பொன் | ஐயப்பா |
| கெருட வாகனன் சுதனே | ,, | ,, | ,, |
| கேசவன் மகனே | ,, | ,, | ,, |
| கை தூக்கி விடுபவனே | ,, | ,, | ,, |
| கொடியோரை அழிப்பவனே | ,, | ,, | ,, |
| கோவிந்தன் மகனே | ,, | ,, | ,, |
| கௌஸ்துப மணியே | சரணம் | பொன் | ஐயப்பா |

சுவாமியே சரணம் ஐயப்பா,

## ஸ்ரீ ஐயப்ப சுவாமி
## நூற்றெட்டு சரணநாம ஸ்தோத்திர வழிபாடு

| | | | |
|---|---|---|---|
| ஓம் கன்மூலை கணபதியே | சரணம் | பொன் ஐயப்பா |
| காந்தமலை ஜோதியே | ,, | ,, |
| ஹரி ஹர சுதனே | ,, | ,, |
| அன்ன தானப் பிரபுவே | ,, | ,, |
| ஆறுமுகன் தம்பியே | ,, | ,, |
| ஆபத்தில் காப்பவனே | ,, | ,, |
| இன் தமிழ்ச் சுவையே | ,, | ,, |
| இச்சை தவிர்ப்போனே | ,, | ,, |
| ஈசனின் திருமகனே | ,, | ,, |
| ஈடில்லாத் தெய்வமே | ,, | ,, |
| உண்மைப் பரம்பொருளே | ,, | ,, |
| உலகாளும் காவலனே | ,, | ,, |
| ஊழ்வினை அழிப்பவனே | ,, | ,, |
| எழியோருக்கு அருள்பவனே | ,, | ,, |
| ஏழை பங்காளனே | ,, | ,, |
| ஏகாந்த மூர்த்தியே | ,, | ,, |
| ஐங்கரன் தம்பியே | ,, | ,, |
| ஐயமெல்லாம் தீர்ப்பவனே | ,, | ,, |
| ஒப்பில்லாத் திருமணியே | ,, | ,, |
| ஒளிரும் திருவிளக்கே | ,, | ,, |
| ஓங்காரப் பரம்பொருளே | சரணம் | பொன் ஐயப்பா |

ஓதும் மறைப் பொருளே சரணம் பொன் ஐயப்பா
ஔடதங்கள் அருள்பவனே ,, ,,
சௌபாக்கியம் அளிப்பவனே ,, ,,
கலியுக வரதனே ,, ,,
சபரிமலைச் சாஸ்தாவே ,, ,,
சிவன் மால் திருமகனே ,, ,,
சிவ வைஷ்ணவ ஐக்கியமே ,, ,,
அச்சன்கோயில் அரசே ,, ,,
ஆரியங்காவு ஐயனே ,, ,,
குளத்துப் புழை பாலகனே ,, ,,
பொன்னம்பல வாசனே ,, ,,
வில்லாளி வீரனே ,, ,,
வீரமணி கண்டனே ,, ,,
உத்தரத்தில் உதித்தவனே ,, ,,
உத்தமனே சத்தியனே ,, ,,
பம்பையிலே பிறந்தவனே ,, ,,
பந்தள மாமணியே ,, ,,
சகல கலை வல்லவனே ,, ,,
சாந்தம் நிறைந்தவனே
மெய்ப்பொருளே சரணம் ,, ,,
குருவின் குறை தீர்த்தவனே ,, ,,
குருதெட்சணை அளித்தவனே ,, ,,
புலிப் பால் கொணர்ந்தவனே ,, ,,
வன் புலி வாகனனே ,, ,,
தாயின் நோய் தீர்த்தவனே ,, ,,
குருவுக்கும் குருவே ,, ,,
வாபரின் தோழனே ,, ,,
துளசிமணி மார்பனே ,, ,,
தூய வுள்ளம் அளிப்பவனே ,, ,,
இரு முடிப் பிரியனே ,, ,,
எருமேலி தர்மசாத்தாவே ,, ,,
நித்திய பிரமச்சாரியே ,, ,,
நீலவஸ்திர தாரியே ,, ,,
பேட்டை துள்ளும் பொருளே சரணம் பொன் ஐயப்பா

பெரும் ஆணவத்தை அழிப்பவனே

சரணம் பொன் ஐயப்பா

சாஸ்தாவின் நந்தவனமே ,, ,,
சாந்திதரும் பேரழகே ,, ,,
பேரூர்த் தோடு தரிசனமே ,, ,,
பேதமை ஒழிப்பவனே ,, ,,
காளை கட்டி நிலையமே ,, ,,
அதிர்வேட்டுப் பிரியனே ,, ,,
அழுதைமலை ஏற்றமே ,, ,,
பஜனைப் பிரியனே ,, ,,
கல்லிடும் குன்றே ,, ,,
உடும்பாறைக் கோட்டையே ,, ,,
இஞ்சிப்பாறைக்கோட்டையே ,, ,,
காயிலந் தோடே ,, ,,
கரிமலை ஏற்றமே ,, ,,
கரிமலை இறக்கமே ,, ,,
பெரியானை வட்டமே ,, ,,
சிறியானை வட்டமே ,, ,,
பம்பா நதி தீர்த்தமே ,, ,,
பாபம் எல்லாம் அழிப்பவனே ,, ,,
திரிவேணி சங்கமமே ,, ,,
திரு இராமர் பாதமே ,, ,,
சக்தி பூஜை கொண்டவனே ,, ,,
சபரிக்கு அருள்செய்தவனே ,, ,,
தீப ஜோதி திரு ஒளியே ,, ,,
தீராத நோய் தீர்ப்பவனே ,, ,,
பம்பா திருவிளக்கே ,, ,,
பலவினை ஒழிப்பவனே ,,
தென் புலத்தோர் வழிபாடே ,,
திரு பம்பையின் புண்ணியமே ,,
நீலி மலை ஏற்றமே ,,
நிறைந்த உள்ளந் தருவோனே ,,
அப்பாச்சி மேடே ,,
இப்பாச்சிக் குழியே ,,
சபரி பீடமே சரணம் பொன் ஐயப்பா

சரங்குத்தி ஆலே சரணம் பொன் ஐயப்பா
உரல் குழி தீர்த்தமே ,,
கருப்பண்ண சுவாமியே ,,
கடுத்த சுவாமியே ,,
பதினெட்டாம் படியே ,,
பகவானின் சன்னதியே ,,
பரவசப் பேருணர்வே ,,
பசுவின் நெய் அபிஷேகமே ,,
கர்ப்பூரப் பிரியனே ,,
நாகராஜப் பிரபுவே ,,
மாளிகை புரத்து அம்மனே ,,
மஞ்சமாத திருவருளே ,,
அக்கினிக் குண்டமே ,,
அலங்காரப் பிரியனே ,,
பஸ்மக் குளமே ,,
சற்குரு நாதனே ,,
மகர ஜோதியே ,,
மங்கள மூர்த்தியே ,,
ஸ்ரீ ஐயப்ப சுவாமியே சரணம் பொன் ஐயப்பா

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும், செய்த சகல குற்றங்களையும், பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிமேல் வாழும் ஓம் ஹரி ஹர சுதன் ஆநந்த சித்தன், ஐயன், ஐயப்ப சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா.

## மணிகண்டா! மணிகண்டா !!

மணி கண்டா மணி கண்டா
மாமலை வாசா மணி கண்டா
மணி கண்டா மணி கண்டா
மானுட ரூபா மணி கண்டா

மணி கண்டா மணி கண்டா
ஹரி ஹர புத்திரா மணி கண்டா
மணி கண்டா மணி கண்டா
மோகன ரூபா மணி கண்டா
மணி கண்டா மணி கண்டா
மோகினி பாலா மணி கண்டா
மணி கண்டா மணி கண்டா
ஜோதி ஸ்வரூபா மணி கண்டா
மணி கண்டா மணி கண்டா
சரணம் சரணம் மணி கண்டா
சுவாமியே சரணம் ஐயப்பா.

## "எங்கள் மணிகண்டன்"

சபரிமலை தன்னில் வாழும் எங்கள் மணிகண்டன்
சகல வேத சாஸ்திரியன் ,,
பக்தர் கவலை நீக்கிடுவார் ,,
முக்தி அளித்து ஆதரிப்பார் ,,
வில்லணிந்த வீரரிவர் ,,
குளத்தூரில் குடியிருப்பார் ,,
உலகமெங்கும் புகழ் பெற்றார் ,,
நித்திய பிரமச்சாரியானார் ,,
வேல் முருகன் தம்பியன்றோ ,,
புலியின் மிசையே ஏறி வருவார் ,,
ஆரியங் காவு ஐயரிவர் ,,
ஞானவழி காட்டிடுவார் ,,
ஹரி ஹரனின் மைந்தனாகும் ,,
அன்பர்களைக் காக்கவந்தார் ,,
பந்தளத்தில் வந்துதித்தார் ,,
பரப்பிரம மூர்த்தியானார் ,,
மஹிஷியைச் சங்கரித்தார் ,,
மோக்ஷ வழி காட்டிடுவார் ,,
பேரும் புகழும் தந்திடுவார் ,,
நித்திய மங்கள மூர்த்தியானார் எங்கள் மணி கண்டன்

சுவாமியே சரணம் ஐயப்பா!

# "என்ன மணக்குது"

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே - என்ன மணக்குது

1 அல்லி மலர் மணமும் எங்கே மணக்குது
ஐயப்ப சுவாமியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

2 மல்லிகைப் பூ மருக் கொழுந்து எங்கே மணக்குது
மரகத மூர்த்தியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

3 முல்லை மலர் மணமும் எங்கே மணக்குது
மோகினியாள் பாலகனின் மேலே மணக்குது - என்ன மணக்குது

4 சம்பங்கி ரோசாவும் எங்கே மணக்குது
சாஸ்தாவான பாலகனின் மேலே மணக்குது - என்ன மணக்குது

5 பிச்சி இருவாட்சியும் எங்கே மணக்குது
பிரியமுள்ள பாலகனின் மேலே மணக்குது - என்ன மணக்குது

6 காட்டு மல்லி நாட்டு மல்லி எங்கே மணக்குது
கருணாகர மூர்த்தியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

7 குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது
மங்கள மூர்த்தியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

8 அத்தர் புனுகுவகை எங்கே மணக்குது
அச்சன்கோயில் அரசனின் மேலே மணக்குது - என்ன மணக்குது

9 கொழுந்து மனோரஞ்சிதம் எங்கே மணக்குது
சபரிமலை உச்சியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

10 பன்னீரும் கஸ்தூரியும் எங்கே மணக்குது
பந்தளத்துச் செல்வனின் மேலே மணக்குது - என்ன மணக்குது

11 சாம்பிராணி வாடையது எங்கே மணக்குது
ஏரிமேலி சாஸ்தாவின் மேலே மணக்குது - என்ன மணக்குது

12 பரிமள வாடையது எங்கே மணக்குது
சபரி மலை உச்சியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

13 கற்பூர வாடையது எங்கே மணக்குது
காந்தமலை ஜோதியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

14 பாங்கான நெய்மணமும் எங்கே மணக்குது
தேங்காயின் திருவுருவின் மேலே மணக்குது - என்ன மணக்குது

15 தாளம்பூ வாடையது எங்கே மணக்குது
தர்ம சாஸ்தாவின் மேலே மணக்குது - என்ன மணக்குது

16 மஞ்சள்பொடியின் மகிமையது எங்கே மணக்குது
மஞ்ச மாத சந்நிதியின் மேலே மணக்குது - என்ன மணக்குது

17 சந்தன வாடையது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னதியில் தானே மணக்குது - என்ன மணக்குது

18 சர்க்கரை ஏலம் பாயாசம் எங்கே இனிக்குது
சரணம் சரணம்என்று சொல்லத்தானே இனிக்குது - என்ன

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஐயப்பன் பஞ்ச ரத்தினம்

அத்துவித வஸ்துவாய் ஆதி பரமாத்மனுய்
அசலனுய் அகுண குணனுய்
அமரருக் கதிபனுய் அடியவர்க்கு எளியனுய்
ஹரி ஹரர்க் கொரு மைந்தனுய்
சுத்த ஸத்துவ பரப்பிரம்ம ஸாக்ஷாத்கார
ஜோதியாய்த் தோன்றும் உந்தன்
துரிய லீலா வைபவங்கள் பல என்று மறை
சொல்லுகின்ற தேது மறியேன்
பித்தனுய் நினது புகழ் பேசித்திரிந்து
பெருமையை நினைந்து பாடிப்
பிதற்றுகின்றேன் நின் பெருங்கோயில் எய்தினேன்
பிழை பொறுத்தாள வருவாய்
தத்துவம் அனைத்துமொரு முத்திரை உரைத்திடத்
தந்த சத்குரு நாதனே
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரி மாமலை வாசனே.

அந்தகாரத்திலே அருள் விளக்கேந்துவாய்
அடவியில் வழி காட்டுவாய்
அரவுபுலி மிருகங்கள் அலகை பேய்குரள் கள்வர்
அணுகாது காத்து வருவாய்
வந்தனை புரிந்து மணமலரிட்டு வாழ்த்துவோர்
மரபெலாம் ஓங்க வைப்பாய்
மாருத நோய்க்கொரு மருந்தாகி மாற்றுவாய்
மரண பயமும் போக்குவாய்
இவ்விதம் நீபுரியும் எண்ணிலா விளையாட்டால்
எண்ணித் துதிக்க வசமோ
ஏருத மலையேறி எய்து மெய்யடியவரை
ஏற்பதுன் பாரம் அல்லவோ
சந்தன சுகந்த சுந்தர சுதந்திரசித்த
சங்க சற்குரு நாதனே
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரிமா மலைவாசனே.

ஏந்துபுகழ் சூழ்ந்தகன காந்கிரி ஓங்கிஎழும்
ஏகாந்த ஜோதி மணியே
எண்ணுவோர் எண்ணியதெலாம் தந்து தந்துபேர்
இன்பமழை பொழியும் முகிலே
நீந்தரிய பிறவிப் பெருங்கடல் கடத்தியருள்
நிலேசேர்க்க வந்த துணேயே
நெடும்பாலே வனவாழ்வில் நின்ற கற்பகமே
நிராலம்ப மான பொருளே
மாந்தளிர் மடந்தையர் மருங்குற மகிழ்ந்தெம்மை
வாழ்விக்கும் கருணே வடிவே
வரநீலசேல சிங்கார சுகுமார மதி
வதனனே மணி கண்டனே
சாந்த சமரச சச்சிதானந்த சன்னதியில்
சரணமே சரணம் அருள்வாய்
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரிமா மலே வாசனே.

நீயலாதென் குறைகள் கேட்பவரு மில்லேயொரு
நிழலில்லி எனது மனமோ
நிலேயில்லே நினேயடையும் நியமங்களில்லே நின்
நினேவின்றி ஒன்றும் இல்லே
ஆயிரம் பிழைகள் தனதடியவர் புரிந்தாலும்
ஆதரித் தருளும் அரசே
அவதார மூர்த்தியே அன்பான தெய்வமே
ஆதி ஐயப்ப குருவே
தூயவனே பம்பைத் துறைவனே சிவஞான
ஜோதியே ஈன்றவர் உன்னேத்
தொட்டணேத்து ஐய நீயார் போன்றுளாயெனச்
சொல்லாது மவுன மாகித்
தாயவள் மடித்தலமிருந்து முத்திரை யென்று
தந்தைபோல் வைத்த மகனே
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரிமா மலே வாசனே.

அரியமறை புகழ்கின்ற அன்னதானம் செயும்
அருளாளர் வாழ்க வாழ்க
அனுதினமும் நின்கோயில் இலகுதிசை தொழுகின்ற
அனைவரும் மகிழ்ந்து வாழ்க
விரத நியமனங்களால் மெய்மறந்து உனதுபெயர்
விண்ணதிரவே முழங்கி
வெற்பேறி வளர்படிகள் மேலேறி வருகின்ற
மெய்த்தொண்டர் வாழ்க வாழ்க
தெரியவினை யாடியற் புதசித்து காட்டுமுன்
திருநாம மகிமை வாழ்க
தேடும் இக்கவிமாலை பாடுவோர் இன்பச்
சிறப்பெலாம் ஓங்கி வாழ்க
சரியைகிரியை யோகஞான சன்னதி சரணம்
சரணமே சரணம் ஐயா
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரிமா மலை வாசனே.

## அரிகர புத்திரர் துதி

பையரா வமளியானும் பரம் பொருண் முதலு நல்கு
மையனே யோலம் விண்ணோர்க் காதியே யோலஞ் செண்டார்
கையனே யோல மெங்கள் கடவுளே யோல மெய்யர்
மெய்யனே யோலந் தொல்சீர் வீரனே யொல மோலம்

ஆரணச் சுருதி யோர் சாரடைவுருத் திரனென் றேத்துங்
காரணக் கடவு ளோலங் கடனிறத் தெந்தா யோலம்
பூரணைக் கிறைவா வோவம் புட்கலை கணவா வோலம்
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரா னேல மென்றுள்

மோகினியாய் வந்தமால் மீதே மயலாகி
ஆகமுற வேதமுவி ஆலகண்டன்- மேகநிற
அய்யனை ரப்பனும் அண்ணல் தனையீந்தான்
மெய்யன்பு கொள்வமவன் மீது.

# திருப்படிப் பாடல்

ஒன்றும் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

மூன்றும் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

ஐந்நாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

ஆறும் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

ஏழாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

எட்டாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

பத்தாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சாமியல்லா தொரு சரணம் என் ஐயப்பா

பதினொன்றும் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பன்னிரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதின்மூன்றும் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதின் நான்காந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதினைந்தாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதினாறாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதினேழாந் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயபபா

படி பதினெட்டும் சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியல்லா தொரு சரணம் பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்து ரட்சிக்கவேண்டும் ஓம் சத்திய மான பொன்னு பதினெட்டாம் படிமேல் வாழும் ஓம் அரிஹர சுதன் ஐயன், ஐயப்ப, சுவாமியே சரணம் ஐயப்பா.

## சபரி கிரீஸ்வரன் பஞ்ச ரத்தினம்

1) அரிகர சுதனே திருவருள் தருவாய்
ஆநந்த ஜோதியனே
எருமேலி பந்தனம் கரிமலை பம்பையில்
ஆதியாய் வந்தவனே
இருமுடி ஏந்தி திருவடி காண
இன்னருள் தந்தவனே
ஜெய ஜெய தேவா! சபரிகிரீசா
ஜெயமே வாழ்வில் கருமீசா

2) அச்சன் கோயில் அரசனும் வந்து
அன்பினைத் தந்திடுவாய்
ஆரியங் காவில் ஐயாவென்றே
அருளைப் பொழிந்திடுவாய்
குளத்துப் புழையில் குழந்தையைப் போலே
கொஞ்சித் தவழ்ந்திடுவாய்
ஜெய ஜெய தேவா சபரி கிரீசா
ஜெயமே வாழ்வில் தருமீசா;

3) கல கல கலவெனக் கண்ணீர் பெருகக்
கனிந்தே நீ வருவாய்
சல சல சலவெனச் சரணம் ஒலித்திடச்
சாஸ்தா நீ வருவாய்
தள தள தளவெனத் தர்மம் தழைத்திடத்
தலைவா நீ வருவாய்
ஜெய ஜெய தேவா சபரி கிரீசா
ஜெயமே வாழ்வில் தருமீசா

4) பஞ்சமித் திதியில் மார்கழிச் சனியில்
உத்தரத் துதித்தவனே
வஞ்சகம் அழித்து வெஞ்சினம் ஒழித்து
வாழ்ந்திடச் செய்தவனே
பிஞ்சு மனங்கள் தஞ்சம் அடைத்தோம்
சரணம் புண்ணியனே
ஜெய ஜெய தேவா சபரி கிரீசா
ஜெயமே வாழ்வில் தருமீசா.

5) ஜெய ஜெய பாலா வன்புலி வீரா
ஜெய ஜெய சபரி கிரீசா
ஜெய ஜெய ராஜா பந்தன மன்னு!
ஜெய ஜெய சபரி கிரீசா
ஜெய ஜெய நாதா அருள் மணி கண்டா
ஜெய ஜெய சபரி கிரீசா
ஜெய ஜெய தேவா சபரி கிரீசா
ஜெயமே வாழ்வில் தருமீசா;

# நாகராஜா வழிபாடு

ஆடு ராஜா! நாகராஜா! நீ
ஐயப்பன் பேர் சொல்லி ஆடுராஜா (ஆடு ராஜா)

அச்சன் கோயில் அரசைக் கண்டு ஆடுராஜா - எங்கள்
அச்சமெல்லாம் போக்கிட நீ ஆடுராஜா (ஆடு ராஜா)

ஆரியங்கா ஐயனைக் கண்டு ஆடு ராஜா - எங்கள்
ஆபத்தெல்லாம் நீங்கிடவே ஆடு ராஜா (ஆடு ராஜா)

இன்பமெல்லாம் பொங்கிடவே ஆடு ராஜா - எங்கள்
இல்ல மெல்லாம் காத்துநின்று ஆடுராஜா (ஆடு ராஜா)

ஈயாரைப் பயமுறுத்தி ஆடுராஜா - எங்கள்
சபரி ஈசனவன் அருகிருந்து ஆடுராஜா (ஆடு ராஜா)

உண்மைக்கு ஊறுவந்தால் ஆடு ராஜா - என்றும்
உத்தமரைக் காத்திட நீ ஆடுராஜா (ஆடு ராஜா)

ஊழ்வினையின் துயர் தீர்க்க ஆடுராஜா - நல்ல
ஊர் காக்கும் தெய்வமே நீ ஆடுராஜா (ஆடு ராஜா)

ஏழையர்க்குக் காவலாய் நீ ஆடுராஜா - இடர் ஏதும்
செய்யாமல் நீ ஆடு ராஜா (ஆடு ராஜா)

ஐயப்பன் மலைமீது ஆடுராஜா - என்றும்
ஐசுவரியம் நிலைத்திருக்க நீ ஆடுராஜா (ஆடு ராஜா)

ஒருவருக்கும் தீங்கின்றி ஆடுராஜா - உலகில்
ஒற்றுமையைக் காத்திட நீ ஆடுராஜா (ஆடு ராஜா)

ஓங்காரமாய் வளைந்து வளைந்து ஆடுராஜா - நாங்கள்
ஓதுகின்ற குரல் கேட்டு ஆடுராஜா! - (ஆடு ராஜா)

ஔடதமாய் நலந்தரவே ஆடுராஜா - நீ
சௌபாக்கியம் தந்திடவே ஆடு ராஜா - (ஆடுராஜா)

ஆகு மண்டலம் அணிதலை வைத்தவன்
யோகமா நலம் நூகர வளிப்பவன்
மோகம் நீத்தருள் முத்திக்கு வித்திடும்
நாகராஜனின் நற்பதம் போற்றுவாம்.

ஸ்ரீ நாகராஜ சுவாமிக்கு ஜே!

# திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியையாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும்ஆகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

# திருப்பாவை

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல்லூடு கயலுகள்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காத புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தே லோரெம்பாவாய்.

## விநாயகர் துதி

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## சிவபெருமான் துதி

திருவந்த தொல்லைப் புவனத் தொடு தேவர் போற்றிப்
பெரு வந்தனை செய்தறி தற்கரும் பெற்றி யெய்தி
யருவந்தனையு முருவத்தையு மன்றி நின்ரு
னெருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்,

## உமாதேவியார் துதி

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவி தன்மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

## சுப்பிரமணியர் துதி

ஒன்று தொருடலை யொருவி யாவிமெய்
துன்று தொருலைத் தொடங்கி யைவகை
மன்று தொருடிய வள்ளல் கமுறக்
குன்று தொருடிய குமரற் போற்றுவாம்.

## வீரபத்திரர் துதி

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

## வைரவர் துதி

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வாலமா மெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற் கழல்க ளேத்துவாம்.

## சண்டேஸ்வரர் துதி

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனுடைகள் பிறவும் வேறுதனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை யடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளுந் தூயோ னடித்தாமரை தொழுவாம்,

# ஜோதி வணக்கம்

1) ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதியே ஜக ஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி
ஆதியே அருளாதியே

2) நீதிநிழலில் அன்று மின்றும்
நின் றிலங்கும் ஜோதியே
நிமல வடிவில் உலகமுழுதும்
நிறைந்த எங்கள் ஜோதியே

3) விண்ணுலகமும் மண்ணுயிர்களும்
வேத விதியும் ஜோதியே
கண்ணுளாடும் மணியும் ஒளியும்
கருணை வடிவும் ஜோதியே

4) அன்பு மயமும் அறிவினுயர்வும்
ஆத்ம ஞானமும் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள்
எரியும் ஜோதி ஜோதியே.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## மங்களம்

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

## மங்களம்

சபரிமலை தன்னில்வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றுமந்த சன்னிதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையோனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலி மிசையே பவனி வரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயக்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்

அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகேயுருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்
வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வேந்தனுக்கு பதமளித்த வள்ளலுக்கு மங்களம்
வித்தகனும் வீரமணி கண்டனுக்கு மங்களம்
சாந்தரூபனை எங்கள் சாஸ்தாவுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தனம்பேர் பாடுகிற அனைவருக்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்.

## திரு அருட்பா

ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்
உனை மறவாது இருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வுநான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே!
சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

## பொதுவான பிரார்த்தனை

ஓமெனும் பொருளே உலகெலா மாக்கி
அளித்தே அழிக்கும் ஆண்டவா உன்னை
அரனே என்றும் அரியே என்றும்
அப்பனே என்றும் அம்மையே என்றும்
புத்தரே என்றும் கர்த்தரே என்றும்
அல்லா என்றும் அருகனே என்றும்
பல்உருத் தந்து பல பெயர் இட்டு

நல்லுளத் தோடு நாங்கள் எல்லோரும்
எவ்வழி போற்றினும் அவ் வழிக்கு இரங்கி
அருளுவ தறிந்தோம் அண்ணலே போற்றி
உலக மெல்லாம் ஒருகுலமாய் வாழ்வோம்
உள்ளம் ஒன்றி ஒற்றுமையை நாடுவோம்
கலகம் இல்லை கட்சி இல்லை! யாவரும்
கரும வீரராகத் தொண்டு செய்குவோம்
மனவிகாரத்தை எடுத்து எறிகுவோம்
அனைவருக்கும் பொது நலன்கள் ஆற்றுவோம்
அச்சமற்ற சுதந்திரத்தைப் போற்றுவோம்.

உலக மெல்லாம் உயர் நலம் பெருகுக
அகிலம் எங்கும் அமைதி நிலவுக
பாருல கெங்கும் பூரணம் பொலிக
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
பொங்கும் மங்களம் இங்கும் தங்குக
அசத் தற நீங்கி சத்தே வருக
இருளற நீங்கி ஒளியே வருக
வீழ்வது நீங்கி வாழ்வே வருக
பிரிவினை நீங்கி உறவே வருக.

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலலாம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1) தென்னாடுடைய சிவனே போற்றி.
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

(2) நமப் பார்பதி பதயே
அர கர மஹா தேவா

(3) இன்பமே சூழ்க!
எல்லோரும் வாழ்க!

உ

## எமது வெளியீடுகள்:-

- கேதார கௌரி விரதம்
- முத்திராலட்சண விதி ரூ. 4 - 50
- மகோற்ஸவகால தமிழ் வேத திருமுறைத் திரட்டு ரூ. 6 - 90
- விவாகக்கிரியை விளக்கம் ரூ. 4 - 50
- மகாகும்பாபிஷேக தத்துவங்கள் ரூ. 4 - 00
- மகோற்ஸவ விளக்கம் ரூ 8 - 50

## கிடைக்குமிடங்கள்:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
134, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர்சபை,
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

எமது அடுத்த வெளியீடு.

அபரக்கிரியை விளக்கம்